# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION – **LANGUAGES**

FOURTH SEMESTER – **APRIL 2022**

**UTL 4101 – GENERAL TAMIL - IV**

Date: 21-06-2022 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

**பகுதி -அ**

**அனைத்து வினாக்களுக்கும் விடை விடையளிக்க.** *(10×2=20)*

1. திருக்குறளுக்கு வழங்கப்படும் பெயர்களுள் எவையேனும் இரண்டினை எழுதுக.
2. நாலடியார் -குறிப்பு வரைக.
3. "தாளாளன் என்பான்", "வேளாளன் என்பான்"- எத்தகையோர் விளக்குக?
4. பாடாண் திணை என்றால் என்ன? விளக்குக?
5. குறிஞ்சித் திணையின் முதற்பொருளை விளக்குக.
6. ஆற்றுப்படை நூல்கள் யாவை?
7. எட்டுத்தொகையில் இடம்பெறும் புற நூல்களை எழுதுக.
8. "திருக்குறள்" முப்பால் என அழைக்கப்படுவதன் காரணத்தை விளக்குக.
9. *Prevention is better than cure-* தமிழில் மொழிபெயர்க்க.
10. ஔவை நாடகத்தில் இடம்பெறும் துணைமைப் பாத்திரங்களின் பெயர்களுள் இருவர் பெயர்களை எழுதுக

**பகுதி -ஆ**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.** *(5×7=35)*

11. **"இனியவை கூறல்" அதிகாரக் கருத்துகளை** விளக்கியுரைக்க.
12. **"**திரிகடுகம்" கூறும் உறவு, நட்பு குறித்த செய்திகளை விளக்குக.
13. "நிலத்தினும் பெரிதே" , **"**அகவன் மகளே" எனத்தொடங்கும் குறுந்தொகைப் பாடல்களை விளக்கியுரைக்க.
14. குறிஞ்சிப்பாட்டு சுட்டும் தழையாடை உடுத்த மங்கையரின் நிலைப்பாட்டை**ச்** சான்றுடன் நிறுவுக.
15. சிறுபாணாற்றுப்படை கூறும் கடையெழு வள்ளல்களின் சிறப்புகளைச் சான்றுடன் விளக்குக.
16. சங்க இலக்கியமும் அதன் சிறப்பியல்புகளையும் பற்றித் தொகுத்துரைக்க.
17. ஔவை நாடகத்தில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களின் பண்புநலன்களைக் கூறுக.

**பகுதி-இ**

**மூன்று பக்க அளவில் விடையளிக்க.** *(3×15=45)*

18. திருக்குறள் கூறும் நட்பு,குறிப்பறிதல் அதிகாரங்களின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

    ( **அல்லது** )

    காய்நெல் அறுத்துக், யாதும் ஊரே எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடல்களின் கருத்துகளைச் சான்றுடன் விளக்குக.

19. "எறித்தரு கதிர் தாங்கி" எனும் கலித்தொகைப் பாடல் கூறும் கருத்துகளை விளக்குக.

    ( **அல்லது** )

    பட்டினப்பாலை கூறும் புகார் நகரின் சிறப்புகளைச் சான்றுடன் விவரிக்க.

20. திருக்குறளின் அமைப்பும் சிறப்பும் குறித்து**க்** கட்டுரை வரைக.

    ( **அல்லது** )

    ஔவை நாடகத்தில் இடம்பெற்ற நாடகக் கூறுகளை விளக்குக.

&&&&&&&&&&&&